## (ஏ) சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும்

### பொது

இலங்கைச் சென்மதி நிலுவை, வெளிநாட்டுச் சொத்துக்கள் என்பனபற்றிய விபரமான புள்ளிவிபரங்கள் பின்னிணைப்பு 11இல் 44 இலிருந்து 48வரை உள்ள அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன. சென்மதி நிலுவைத் தரவுகள் பெருமளவுக்குச் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பதிவேடுகளிலிருந்தே பெறப்பட்டன. மேலும், திட்டப்பொருளாதார அலுவலர்கள் அமைச்சு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற வேறு சில மூலங்களிலிருந்து பெற்ற தகவல்கள் மூலம் நிறைவுசெய்யப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகப் பகுதியில் கையாளப்படும் புள்ளிவிபரங்கள் முற்றிலும் சுங்கப் பதிவேடுகளிலிருந்தே பெறப்படுவதினால் இவ்வெண்தொகைகள் மேற்குறிப்பிட்ட தரவுகளிலிருந்து வேறுபடக்கூடும்.

1973ஆம் ஆண்டில் இலங்கையின் நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட நிலுவையானது, தற்காலிக மதிப்பீடுகளின்படி, ரூ. 1,610 இலட்சம் குறைவினைக்காட்டியது. இக்குறைவானது, 1972ஆம் ஆண்டு ரூ. 1,960 இலட்சமாகக் காணப்பட்டது. 1973ஆம் ஆண்டுக் குறைவானது, 1965ஆம் ஆண்டு தொடக்கம் அவதானிக்கப்பட்டவாறு வீழ்ச்சியடைந்து செல்லும் வர்த்தக நிலுவைப்போக்கினுடன் ஒத்துக்காணப்படுகிறது. பணவீக்க நிலைமைகள், வெளிநாட்டு வளங்களில் ஏற்பட்ட தடைகள் பன்னாட்டுப் பணநிலைமையில் உள்ள உறுதியற்ற தன்மை போன்றனவற்றால் இறக்குமதி விலைகள் இவ்விதம் அதிகரிக்காவிடின், இவ்வாண்டுப் பணக்குறை கணிசமானளவிற்குக் குறைந்திருக்கும். எவ்வாறாயினும், 1969ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டுக்கணக்கில் ஏற்பட்ட திருந்தியதன்மை, 1973ஆம் ஆண்டில் ஒருபடி முன்னேறிக் காணப்பட்டது. பொருட்களின் அளவிலும், கொடுப்பனவுகளிலும் கட்டுப்பாடான இறக்குமதிக் கொள்வனவுகளைக் கடைப்பிடித்தமையால்தான் இத்தகைய தொடர்ந்துசெல்லும் திருந்திய தன்மையைப்பேணக்கூடியதாக இருந்தது. இது உள்நாட்டுத் தேவையில் தளர்வு ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டவில்லை. சென்மதி நிலுவையில் உள்ள நடைமுறைக்கணக்கில் ஒரு முக்கிய உறுப்பான வணிகப்பொருள் வர்த்தகமானது, 1972ஆம் ஆண்டில் இருந்த ரூ. 2,550 இலட்சம்கொண்ட பணக்குறையுடன் ஒப்பிடுமிடத்து 1973ஆம் ஆண்டில் இக்குறை ரூ. 2,990 இலட்சமாகியது. எனினும், கட்புலனாகக் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாகப்பணமிகையில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு தேறிய அடிப்படையின்படி, 1972இல் இருந்த ரூ. 590 இலட்சத்திற்கு எதிராக 1973ஆம் ஆண்டில் ரூ.1,380 இலட்சமாக விளங்கி, நடைமுறைக் கணக்கிற்கான குறையை ரூ. 1,610 இலட்சத்திற்குக் கீழடையச் செய்தது.

பொருளாதாரத்தில் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கின் பணக்குறையில் ஏற்பட்ட விளைவுகளை, அக்குறையானது எவ்வாறு நிவர்த்திசெய்யப்பட்டது என்பதுடன் நோக்கியே கணித்தல்வேண்டும். போதிய வெளிநாட்

## அட்டவணை II (ஏ) 1

### இலங்கையின் சென்மதி நிலுவைகள்

ப. இ. ரூபாய்களில்

| ஆண்டு | வர்த்தக நிலுவை | மாற்றற் கொடுப் பனவுகளை உள்ளடக்கிய தேறிய கட்புலனாகாதவை | நடைமுறைக் கணக்கில் உள்ள நிலுவைகள் | தேறிய நீண்ட தவணை மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1957 | − 95 | − 100 | − 195 | − 18 | − 213 |
| 1958 | − 89 | − 64 | − 153 | + 8 | − 145 |
| 1959 | − 183 | − 25 | − 208 | + 32 | − 176 |
| 1960 | − 210 | − 11 | − 221 | + 22 | − 199 |
| 1961 | − 86 | − 7 | − 93 | + 11 | − 82 |
| 1962 | − 143 | + 3 | − 140 | + 39 | − 101 |
| 1963 | − 161 | − 7 | − 168 | + 80 | − 88 |
| 1964 | − 193 | + 33 | − 160 | + 8 | − 152 |
| 1965 | − 13 | + 72 | + 59 | + 58 | + 117 |
| 1966 | − 344 | + 54 | − 290 | + 137 | − 153 |
| 1967 | − 335 | + 46 | − 289 | + 161 | − 128 |
| 1968 | − 380 | + 25 | − 335 | + 224 | − 131 |
| 1969 | − 746 | − 51 | − 797 | + 275 | − 522 |
| 1970 | − 315 | − 35 | − 350 | + 184 | − 166 |
| 1971 | − 287 | + 71 | − 216 | + 404 | + 188 |
| 1972 | − 255 | + 59 | − 196 | + 292 | + 97 |
| 1973 (அ) | − 299 | + 138 | − 161 | + 195 | + 36 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

டுச் செலாவணி ஒதுக்குகள் இல்லாதபொழுது, நீண்ட தவணை மூலதனக் கடன்கள்மூலம் அக்குறையை நிவர்த்திசெய்தல் கூடியளவுக்கு உகந்தமுறை யாகும். இவ்வாறு 1973ஆம் ஆண்டில் உள்வந்த கடன்கள் இக்குறையை நிவர்த்திசெய்யப் போதியதாக இருந்ததுடன் மொத்த நிலுவையில் ரூ. 360 இலட்சம் மிகையையும் ஏற்படுத்தின. இவ்வாறு சாதகமான நிலுவை ஏற் பட்டபோதிலும் இலங்கை, குறுந்தவணைக் கடன்களில் தங்கியிருப்பதில் வீழ்ச்சி யினைப் பதிவுசெய்யவில்லை. இதற்கு எதிர்மாறாகக் குறுந்தவணை, வழங்கலர் கொடுகடன்கள் (கடன்தீர்ப்பனவு நீங்கலாக) காரணமாக ஏற்பட்ட கடன்நிலை ரூ. 2,820 இலட்சத்தால் அதிகரித்தது. இம்மூலங்களிலிருந்து பெற்ற நிதி

யானது, எவ்வாறெனினும் இலங்கையின் வெளிநாட்டு வங்கியின் மொத்தப் பொறுப்புக்களை ரூ. 1,120 இலட்சத்தால் குறைத்துதோடல்லாமல், வெளி நாட்டுச் சொத்துக்களில் ரூ 1,250 இலட்ச சாதாரண அதிகரிப்பினையும் ஏற் படுத்த வழியாயிற்று.

**போக்குகள் பற்றிய விபரம்**

**(அ) வணிகப்பொருட் கணக்கு**

1973ஆம் ஆண்டு இலங்கைச் சென்மதி நிலுவையில் உள்ள வணிகப் பொருட் கணக்கானது, ரூ 2,990 இலட்சம்கொண்ட குறையைப் பதிவுசெய் தது. இது 1972ஆம் ஆண்டிலிருந்து மேலும் ஒருபடி வீழ்ச்சியுற்றுக் காணப் பட்டாலும், இவ்வாண்டு எண்தொகை ஆண்டு நடுப்பகுதி தொடக்கம் இறுதி வரை ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மேலெழுந் தன்மையை மறைக்கின்ற நிலையில் இருக்கின்றது. இறக்குமதிகள் மட்டமானது, இன்றியமையாத உண வுப்பொருட்களின் நுகர்வில் சில ஆகக்குறைந்த மட்டத்தினை உறுதிசெய்தல், அரசாங்க தனியார் துறைக் கைத்தொழில்களுக்கு நியாயமானளவு மூலப் பொருட்கள், இடைநிலைப்பொருட்கள் வழங்குவதன்மூலம் தயாரிப்புக் கைத் தொழிலில் பரந்த அடிப்படையிலான உற்பத்தியைப் பாதுகாத்தல், வேலை நிலைகளைக் குறைப்பதனைத் தடைசெய்தல் போன்ற காரணிகளால் பெரு மளவுக்குத் தொடர்ந்தும் நிர்ணயிக்கப்பட்டுவந்தது. இவ்வாண்டில் முன் அரைக்காலப்பகுதியில் 4/5 க்கு மேலான குறை (ரூ. 2,700 இலட்சம்) ஏற் பட்டது. இதற்குமாருக, மூன்றும் நாலாம் காலாண்டுப் பகுதிகள் கிட்டத் தட்ட ஏற்றுமதிகளுக்கும், இறக்குமதிகளுக்கும் இடையில் சமநிலையைக் காட்டின.

1973ஆம் ஆண்டிற்கான வணிகப்பொருட்கணக்கில் உள்ள முக்கிய பண் பென்னவெனில் அண்மைக்காலங்களில் அவதானிக்கப்பட்டுவந்த ஏற்றுமதி வருவாய்களின் மந்தமுற்ற போக்கானது மாறுபட்டுக் காணப்படுவதேயாகும். கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி ஏற்றுமதி வருவாயுடன் நோக்குமிடத்து, 1973ஆம் ஆண்டில் ரூ. 23,460 இலட்சமாகி, 17 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. அத்துடன் இவ்வதிகரிப்பானது கடந்த அநேக வருடங்களில் காணப்பட்ட மந்தமுற்ற ஏற்றுமதிச் சாதனையுடன் பார்க்குமிடத்து, முன்னைய காலங்களிருலிந்து தெளிவாக மாறுபடுவதனைப் பிரதிபலிக்கின்றது. இம் மாற்றத்திற்கு வழமையான முதன்மை ஏற்றுமதிப் பொருட்களான, றப்பரும் தேயிலையும் அவற்றோடு ஏறக்குறைய எல்லாச் சிறு ஏற்றுமதிப் பொருட் களும் காரணமாயிருந்தன.

1973ஆம் ஆண்டு பண்டப் பொருட்களுக்கு ஏற்பட்ட உலகச்செழிப்பில், முக்கிய ஏற்றுமதிப்பொருட்களில் றப்பரும், தெங்குப்பொருட்களும் மட்டுமே பங்குவகித்தன. எவ்வாருயினும், இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொரு ளான தேயிலையானது, பண்டப்பொருட்களின் செழிப்பினுல் நன்மைபெருத சில பண்டப்பொருட்களில் ஒன்ருக விளங்கியது. அவ்வாறிருந்தபொழுதும்,

தேயிலையிலிருந்து பெற்ற வருவாயானது, 1972ஆம் ஆண்டில் இருந்த ரூ. 9,830 இலட்சத்தில் இருந்து (செலாவணிப் பதிவுக்கேற்ப) 1973ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட ரூ. 10,690* இலட்சமாக உயர்வுற்று மொத்த ஏற்றுமதி வருவாயிற்குக் காரணமாயிருந்தது. இதற்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட அளவு அதிகரித்தமையே முழுமைக் காரணமாகும். றப்பரின் சராசரிக் க.ஏ. பெ. விலைகள் 1972இல் 93 சதத்திற்கு வீழ்ச்சியுறும் முறையில் குறிப்பாக மாற்றமுற்றிருக்க 1973இல் மிகத் துரிதமாக முன்னேறியது. உண்மையில் இவ்வுயர்வானது 1972ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் தோன்றி 1973ஆம் ஆண்டு முழுவதும் விலைகள் மிகக்கூடுதலாக உயர்வுற்று, திசெம்பரில் க. ஏ. பெ. விலைகள் 1 இறாத்தலுக்கு ரூ. 2.69 சதமாகியது. றப்பரிலிருந்து பெற்ற மொத்த வருவாயானது, முன்னைய ஆண்டில் ரூ. 2,990 இலட்சமாக இருந்து, இவ்வாண்டில் ரூ. 5,190 இலட்சமாக உயர்ந்துள்ளதென மதிப்பிடப்பட்டது. இவ்வருவாயில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பெருமளவு கூடிய விலைகள் காரணமாக இருக்கும் அதேசமயத்தில், ஏற்றுமதியின் அளவு அதிகரித்தமையும் ஓரளவு காரணமாகும். 1973ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெங்குப்பொருட்களின் விலைகளும், அநேக முதன்மைப்பொருட்கள் காட்டிய உயர்ந்த விலைப்போக்கினைப்போன்று, தளராது உயர்வுற்றுச்சென்றன. ஆயினும், 1973ஆம் ஆண்டில் ஏற்றுமதியில் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் காரணமாக தெங்குப் பொருட்களில் இருந்து பெற்ற வருவாய் வீழ்ச்சியடைந்தது. 1973ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 1ஆந் திகதிவரை நடைமுறையில் இருந்த ஏற்றுமதித்தடை காரணமாக, தேங்காயெண்ணெய் ஏற்றுமதி பெருமளவு பாதிக்கப்பட்டது. கொப்பறாவைப் பொறுத்தவரையில், பெப்புருவரி 15ஆந் திகதி தொடங்கி வருடமுடிவு ஈறாக ஏற்றுமதித் தடையிருந்தது. முன்னைய ஆண்டு வரட்சியினைத் தொடர்ந்து, இவ்வாண்டில் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட பெரும்ளவு வீழ்ச்சியினால், உள்நாட்டு நுகர்வுக்குப் போதிய பொருட்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்த இவ்வேற்றுமதித்தடை கொண்டுவரப்பட்டது. இதனால், 1973ஆம் ஆண்டில் ஏற்றுமதியின் பெரும்பங்கு தேங்காய்த்துருவலாக விளங்கியது.

சிறிய ஏற்றுமதிகளில் இரத்தினக்கற்கள், அவைசார்ந்த கற்கள், தேங்காயெண்ணெய் தவிர்ந்த தெங்குப்பொருட்கள், தேங்காய்த் துருவல், கொப்பறா ஏனைய வேளாண்மைப் பொருட்கள், கைத்தொழிற் பொருட்கள், கப்பல் எரிபொருள் வருவாய்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுமிடத்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டின. குறிப்பாக, இரத்தினக்கற்கள், அவை

---

* இவ்வெண்தொகையானது, சுங்கத்தரவுகளிலும் பார்க் ஓரளவு குறைவானதாக இருக்கலாம் 1972ஆம் ஆண்டில் தேயிலைப் பயிரானது வரட்சியால் பாதிக்கப்பட்டு, இதன்விளைவாக, ஏற்றுமதியளவு குறைவுற்றது. இவ்வரட்சியின் தாக்கங்கள் முடிவுற்று, திரும்பவும் இப்பயிர் 1973ஆம் ஆண்டுக்காலத்தில் வளரத் தொடங்கியது. தேயிலை ஏற்றுமதிசெய்யப்பட்டதற்கும், அதற்கான பணம் (செலாவணிக் கட்டுப்பாட்டின்படி 6 மாதத்திற்குள் கிடைப்பனவுகள் வரவேண்டும்) கிடைத்தற்குரிய காலத்திற்கும் இடையிலான கால இடைவெளியினால் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பதிவுகளின் அடிப்படையில கணிககப்பட்ட சென்மதி நிலுவை, அதிகரித்த தேயிலை ஏற்றுமதிகளின் முழுப்பெறுமதியினையும் எடுத்துக் காட்டமாட்டாது. ஆனால், சுங்கத்தரவுகள் ஏற்றுமதிசெய்யப்பட்ட காலத்திலிருந்தவற்றின் பெறுமதிகளைச் சுட்டிக்காட்டுவனவாகும்.

## சென்மதி நிலுவைகள்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | |
|---|---|---|---|
| | 1972 | | |
| | வரவு | பற்று | தேறிய |
| **1. வணிகப் பொருட் கணக்கு** | | | |
| ஏற்றுமதிகள் (க. ஏ. பெ.) ... | 1898 | | |
| இறக்குமதிகள் (கொ.கா.க.) (சொந்த வளங்கள்) ... | | 1599 | |
| (உதவி இறக்குமதிகளும் நிரம்பல் செய்வோர் கொடுகடன்களும்) ... | | 554 | |
| மொத்த இறக்குமதிகள் .. | | 2153 | |
| வர்த்தக நிலுவை (சொந்த வளங்கள்) ... | | | (+ 299) |
| வர்த்தக நிலுவை (எல்லா இறக்குமதிகளும்) ... | | | — 255 |
| **2. பணிகள் கணக்கு** | | | |
| நாணயமல்லாத் தங்கம் ... | — | — | — |
| துறைமுகப் பணிகள் ஏற்றியிறக்கற் காப்புறுதி ... | 154 | 61 | + 93 |
| வெளிநாட்டுப் போக்குவரத்து ... | 28 | 12 | + 16 |
| முதலீட்டு வருமானம் ... | 10 | 125 | — 115 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 1 | 23 | — 22 |
| (ii) ஏனைய (வட்டி) ... | 9 | 102 | — 93 |
| அரசாங்கச் செலவு ... | 33 | 20 | + 13 |
| பல்வகைப் பணிகள் ... | 83 | 105 | — 22 |
| தனியார் மாற்றல்கள் ... | 24 | 50 | — 26 |
| மொத்தப் பணிகள் ... | 332 | 373 | — 41 |
| **3. மொத்த நடைமுறைக் கணக்குகள்** (சொந்த வளங்கள்) .. | (2230) | (1972) | (+ 258) |
| மொத்த நடைமுறைக் கணக்குகள் (எல்லா விடயங்களும்) ... | 2230 | 2526 | — 296 |
| **4. மூலதனக் கொடுப்பனவுகள்** .. | | 995 | — 995 |
| கடன்கள் ... | — | 125 | — 125 |
| நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | — | 84 | — 84 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | — | 570 | — 570 |
| எண்ணெய் நட்ட ஈடும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ... | — | — | — |
| தனியார் மூலதனம் ... | — | 8 | — 8 |
| ப. நா. நி. ... | — | 170 | — 170 |
| வங்கிக் கடன்பாடு ... | — | — | — |
| ஏனைய .. | — | 38 | — 38 |
| மொத்த நடைமுறை, மூலதனக் கொடுப்பனவுகள் (சொந்த வளங்கள்) .. | — | — | (— 737) |
| மொத்த நடைமுறை, மூலதன கொடுப்பனவுகள் (எல்லா விடயங்களும்) ... | | | — 1291 |
| **5. நிதியீட்டல்** | | | |
| ப. நா. நி. எடுப்பனவுகள் .. | 163 | — | + 163 |
| வங்கிக் கடன்பாடுகள் ... | 12 | — | + 12 |
| இருபுடை நிலுவைகள் .. | — | 11 | — 11 |
| நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | 52 | — | + 52 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | 593 | — | + 593 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | — | 229 | — 229 |
| பண்ட உதவி .. | 304 | — | + 304 |
| செயற்றிட்ட, ஏனைய உதவி ... | 98 | — | + 98 |
| ஏனைய உதவி ... | 13 | — | + 13 |
| கொடைகள் ... | 100 | — | + 100 |
| தனியார் மூலதனம் .. | 10 | — | + 10 |
| ஏனைய ... | 107 | — | + 107 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் .. | 62 | — | + 62 |
| பிழைகளும் தவறுகளும் ... | 17 | — | + 17 |
| மொத்த நிதியீட்டல் ... | 1531 | 240 | + 1291 |

(அ) தற்காலிகமானவை.

எண் தொகைகள் கிட்டிய எண்தொகைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

1972—1973

| பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பத்து இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1973 (அ) | | | 1972 | | | 1973 (அ) | | |
| வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| 2,346 | | | 308 | | | 368 | | |
| | 1986 | | | 259 | | | 312 | |
| | 658 | | | 90 | | | 103 | |
| | 2644 | | | 349 | | | 415 | |
| | | (+ 360) | | | (+ 49) | | | (+ 56) |
| | | — 298 | | | — 41 | | | — 47 |
| — | — | — | — | — | — | — | — | — |
| 177 | 62 | + 115 | 25 | 10 | + 15 | 28 | 10 | + 18 |
| 59 | 10 | + 49 | 5 | 2 | + 3 | 9 | 2 | + 7 |
| 17 | 127 | — 110 | 2 | 21 | — 19 | 3 | 20 | — 17 |
| 1 | 19 | — 18 | — | 4 | — 4 | — | 3 | — 3 |
| 16 | 108 | — 92 | 2 | 17 | — 15 | 3 | 17 | — 14 |
| 33 | 20 | + 13 | 5 | 3 | + 2 | 5 | 3 | + 2 |
| 103 | 115 | — 12 | 13 | 17 | — 4 | 16 | 18 | — 2 |
| 48 | 46 | + 2 | 4 | 8 | — 4 | 8 | 7 | + 1 |
| 437 | 380 | + 57 | 54 | 61 | — 7 | 69 | 60 | + 9 |
| 2,783 | (2.366) | (+ 417) | (362) | (320) | (+ 42) | (437) | (372) | (+ 65) |
| 2,783 | 3.024 | — 241 | 362 | 410 | — 48 | 437 | 475 | — 38 |
| | 1,277 | — 1277 | — | 161 | — 161 | — | 201 | — 201 |
| — | 141 | — 141 | — | 20 | — 20 | – | 22 | — 22 |
| — | 95 | — 95 | — | 14 | — 14 | – | 15 | — 15 |
| — | 644 | — 644 | — | 92 | — 92 | — | 101 | — 101 |
| — | — | — | — | — | — | — | — | — |
| — | 5 | — 5 | — | 1 | — 1 | — | 1 | — 1 |
| — | 169 | — 169 | — | 28 | — 28 | — | 27 | — 27 |
| — | 112 | — 112 | — | — | — | — | 18 | — 18 |
| — | 111 | — 111 | — | 6 | — 6 | — | 17 | — 17 |
| — | | (— 860) | | | (— 119) | | | (— 136) |
| | | — 1518 | | | — 209 | | | — 239 |
| 137 | — | + 137 | 26 | — | + 26 | 21 | — | + 21 |
| — | — | — | 2 | — | + 2 | — | — | — |
| 1 | — | + 1 | — | 2 | — 2 | — | — | — |
| 240 | — | + 240 | 8 | 2 | + 8 | 38 | — | + 38 |
| 781 | — | + 781 | 96 | — | + 96 | 123 | — | + 123 |
| — | 125 | — 125 | — | 37 | — 37 | — | 20 | — 20 |
| 210 | — | + 210 | 49 | — | + 49 | 33 | — | + 33 |
| 125 | — | + 125 | 16 | — | + 16 | 20 | — | + 20 |
| — | — | — | 2 | — | + 2 | — | — | — |
| 83 | — | + 83 | 16 | — | + 16 | 13 | — | + 13 |
| 6 | — | ÷ 6 | 2 | — | + 2 | 1 | — | + 1 |
| 48 | — | + 48 | 18 | — | + 18 | 8 | — | + 8 |
| — | — | — | 10 | — | + 10 | — | — | — |
| 12 | — | + 12 | 3 | — | + 3 | 2 | — | + 2 |
| 1643 | 125 | + 1518 | 248 | 39 | + 209 | 259 | 20 | + 239 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஏ) 3

## வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்கள் 1970 | 1971 | 1972 | 1973 (அ) | சதவீதப் பங்கு 1970 | 1971 | 1972 | 1973 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) வளங்கள் | | | | | | | | |
| 1. **வணிகப் பொருள் ஏற்றுமதிகள்** க. ஏ. பெ. ... | **2,017** | **1,930** | **1,898** | **2,346** | **58** | **51** | **51** | **53** |
| 2. **பணிகள் கணக்கு** | **234** | **333** | **332** | **437** | **7** | **9** | **9** | **10** |
| 3. **மூலதன உட்பாய்வு** | | | | | | | | |
| **அவற்றில்:—** ... | 382 | 628 | 525 | 424 | 11 | 16 | 14 | 10 |
| (அ) கடன்கள் 1 ... | 299 | 346 | 402 | 335 | 9 | 9 | 11 | 8 |
| (ஆ) ஏனைய உதவிகள் 2 ... | — | 152 | 13 | — | — | 4 | — | — |
| (இ) கொடைகள் 1 ... | 75 | 105 | 100 | 83 | 2 | 3 | 3 | 2 |
| (ஈ) தனியார் மூலதனம் ... | 8 | 25 | 10 | 6 | — | — | — | — |
| 4. **குறுந்தவணைப் பொறுப்புக்கள்** ... | **829** | **903** | **989** | **1,219** | **24** | **24** | **26** | **27** |
| (அ) ப. நா. நி. இலிருந்து மொத்த எடுப்பனவுகள் ... | 57 | 83 | 163 | 137 | 2 | 2 | 4 | 3 |
| (ஆ) சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 78 | 63 | 62 | — | 2 | 2 | 2 | — |
| (இ) இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த மிகுதிகளில் அதிகரிப்பு ... | — | — | — | 1 | — | — | — | — |
| (ஈ) வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து கடன்பாடுகள் ... | 123 | — | 12 | — | 4 | — | — | — |
| (உ) குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | 434 | 658 | 593 | 781 | 13 | 17 | 16 | 18 |
| (ஊ) நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | 85 | 58 | 52 | 240 | 2 | 2 | 1 | 5 |
| (எ) ஏனைய ... | 52 | 41 | 107 | 48 | 1 | 1 | 3 | 1 |
| 5. **வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களைக் கழித்து)** | — | — | — | — | — | — | — | — |
| மொத்தம் ... | **3,462** | **3,794** | **3,744** | **4,414** | **100** | **100** | **100** | **100** |
| (ஆ) பயன்பாடு | | | | | | | | |
| 6. **வணிகப் பொருள் இறக்குமதிகள்** கொ. கா. க. ... | **2,332** | **2,217** | **2,153** | **2,644** | **67** | **58** | **58** | **60** |
| அவற்றின் உதவிகள் ... | 459 | 509 | 554 | 658 | 13 | 13 | 15 | 15 |
| 7. **பணிகள் கணக்கு** ... | **364** | **367** | **373** | **380** | **11** | **10** | **10** | **9** |
| (அ) முதலீட்டு வருமானம் ... | 152 | 134 | 125 | 127 | 4 | 3 | 3 | 3 |
| (ஆ) புலப் பெயர்வாளர் மாற்றல்கள் ... | 23 | 40 | 50 | 46 | 1 | 1 | 1 | 1 |
| 8. **மூலதனக் கடனழித்தல்** | **126** | **132** | **133** | **146** | 3 | 3 | 4 | 3 |
| (அ) அலுவலகக் கடமை சார்ந்த ... | 113 | 96 | 125 | 141 | 3 | 2 | 3 | 3 |
| (ஆ) தனியார் ... | 13 | 36 | 8 | 5 | — | 1 | 1 | — |
| 9. **குறுந்தவணைப் பொறுப்புக்கள்** ... | **605** | **976** | **873** | **1,131** | **18** | 26 | **22** | **25** |
| (அ) ப. நா. நி. நிதியிலிருந்து மீளக் கொள்வனவுகள் ... | 161 | 145 | 170 | 169 | 5 | 4 | 5 | 4 |
| (ஆ) இருபுடைக் கொடுப்பனவு உடன்படிக்கையினுள்ள மீதிகளில் குறைவு .. | 75 | 57 | 11 | — | 2 | 2 | — | 2 |
| (இ) வங்கிக் கடன்பாடுகள் ... | — | 81 | — | 112 | — | 2 | — | 3 |
| (ஈ) குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | 282 | 614 | 570 | 644 | 8 | 16 | 15 | 15 |
| (உ) நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | 80 | 65 | 84 | 95 | 3 | 2 | 2 | 2 |
| (ஊ) ஏனைய ... | 7 | 14 | 38 | 111 | — | — | — | 3 |
| 10. **வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புக்கள் (ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களைக் கழித்து)** | 39 | 89 | 224 | 121 | **1** | **2** | **6** | **3** |
| 11. **சமப்படுத்தும் விடயங்கள்** ... | — 4 | 13 | — 12 | 8 | — | — | — | — |
| மொத்தம் ... | **3,462** | 3,794 | **3,744** | **4,414** | **100** | **100** | **100** | **100** |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1 செயற்றிட்ட உதவிகளாகவும், பண்ட உதவிகளாகவும் பெறப்பட்ட உதவிகளை உள்ளடக்குகின்றது.

2 மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெறப்பட்டதான பணக் கடன்.

எண் தொகைகள், கிட்டிய முழு எண்களுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

சார்ந்த கற்களின் ஏற்றுமதி 1972இல் ரூ. 80 இலட்சமாக விளங்கி 1973ஆம்* ஆண்டில் ரூ. 1,300 இலட்சமாக உயர்ந்து மிகப்பெருமளவு அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. இவ்வாறு இரத்தினக்கற்கள் ஏனைய சிறிய ஏற்றுமதிகளின் வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு இவற்றின் அளவும், விலையும் அதிகரித்தமை காரணமாகும். ஏற்றுமதி அளவுகள் அதிகரித்தமைக்குக் குறிப்பாக இத்துறைக்கு வழங்கிய சிறப்பான தூண்டுதல்கள் காரணமாகும். உதாரணமாக வெ. செ. உ. சா. வின் மூலமாகக் கிடைத்த 65 சதவீத உள்நாட்டு விலை அதிகரிப்பு என்ற சலுகைக்கு எல்லாச் சிறிய ஏற்றுமதிகளும் உரித்துடையனவாக்கப்பட்டன. மேலும் இரத்தினக்கல் ஏற்றுமதி, வருமான வரி மன்னிப்பு வருவாயில் 25 சதவீதத்தினை மாற்றக்கூடிய ரூபாய் கணக்கில் வைத்திருத்தல் போன்ற வாய்ப்பிற்கு உரித்துடையனவாயிருந்தன. ஏனைய சிறிய ஏற்றுமதிகளுக்கு மாற்றக்கூடிய ரூபாக் கணக்குச் சலுகை 2 சதவீதம் மட்டும் வழங்கப்பட்டது.** அத்துடன், கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதிகள், அவற்றிற்கான மூலப்பொருட்களின் இறக்குமதியில் செலுத்தப்பட்ட தீர்வைகளில் கிடைத்த தள்ளுபடிமூலமும் மேலும் ஒரு சலுகையை அனுபவித்தன, எனினும், சிறிய வேளாண்மைப்பொருட்களின் ஏற்றுமதிகளினூல் கிடைத்த வருவாயானது அதிகரித்தமைக்கு, பண்டப்பொருட்களின் பொதுவான செழிப்புக் காலத்தில் பொருட்களில் ஏற்பட்ட பெருமளவு உயர்ந்துசென்ற விலைகளும் பெருமளவுக்குக் காரணமாயிருந்தமை கவனிககற்பாலதாகும்.

செலாவணி ஒப்புமை விகிதத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற மாற்றங்கள், ரூபாய் ஏற்றுமதிப் பெறுமதிகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியமையால் இக் காரணியை இங்கு குறிப்பிடல் வேண்டியுளது. பொதுவாக, செலாவணி வீதம் மதிப்புக்குறையுமிடத்து, வெளிநாட்டு நாணயப் பெறுமதியிலான ஏற்றுமதிக் கிடைப்பனவுகள் அதிகரிக்காதிருக்க, உள்நாட்டுக் கிடைப்பனவுகள் அதிகரிக்கத் தலைப்படுகின்றன. 1973ஆம் ஆண்டு காலப்பகுதியில். இலங்கை ரூபாயின் ஒப்புமை விகிதங்களில் அடிக்கடி ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக எம் நாணயமானது, வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக 5% சதவீதத்தால் மதிப்புக் குறைவடைந்தது. ஏற்றுமதிவருவாயில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் பெரும்பங்கு வெளிநாட்டு நாணய அடிப்படையில் இருப்பதனுல் அதாவது. ஐ. அ. டொலரின் படி, ரூ 3,080 இலட்சமாக இருந்த ஏற்றுமதிகள் 1973ஆம் ஆண்டில் ரூ. 3 680 இலட்சமாக உயர்வுற்றமையால், 1973ஆம் ஆண்டில், உயர்ந்த ரூபாயிலான வருவாய்கள் என்பதற்கான விளக்கம் சிறியளவிற்கே பொருந்துவதாகும். எனவே, 1973ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய்களின் தாக்கத்தில் சர்வதேச விலை என்ற காரணியின் முக்கியத்துவத்தினை இது உறுதிப்படுத்துகின்றது.

---

* 1973ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்துடன் 3 சத்வீதம்வரை உயர்த்தப்பட்டது.

** வெளிநாட்டுச் செலாவணிக் கிடைப்பனவுகளாணவை, இவ்வாண்டில் செய்யப்பட்ட ஏற்றுமதி ஒப்பந்தங்களின் பெறுமதியுடன் மாறுபட்டுக் குறைந்தே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இவ்வாண்டு முடிவுக்காலத்திற்குள் இவ்வொப்பந்தங்கள் நடைமுறைப்படுந்தமுடியாமல் இருந்தமையேயாகும்.

இலங்கையின் இறக்குமதியானது, 1972ஆம் ஆண்டில் ரூ. 21,530 இலட்சமாக இருந்து, 1973ஆம் ஆண்டில் ரூ. 26,440 இலட்சமாகி 23 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. 1968இல் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதையடுத்து உச்ச ஆண்டாகிய 1969ஆம் ஆண்டு தொடக்கம் இறக்குமதிப் பெறுமதியில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு, இது முற்றிலும் மாறுபட்டதாகும். நாட்டினுல் இறக்குமதிசெய்யக்கூடியளவுக்கு மாத்திரம் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் என்ற கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதை இது கருதவில்லை. ஆனுல், இலங்கையின் முக்கிய இறக்குமதிகளுக்குச் செலுத்தவேண்டிய பெரியளவாய் உயர்வுற்ற விலைகளினுல் ஏற்பட்ட தவிர்க்கமுடியாத விளைவாகும். இவ்வதிகரிப்பு எல்லாப்பொருட்களிலும் பரந்து காணப்பட்டாலும், இன்றியமையாத உணவுப்பொருட்களான சீனி, மா அரிசி, பாற்பொருட்களிலும் உப-உணவுப் பொருட்களிலும் மிக அதிகமாகக் காணப்பட்டது. இவ்வாண்டு முழுவதும் காணப்பட்ட தட்டுப்பாடான உலக நிரம்பல் நிலைமைகாரணமாகவும், நாணய மீளிணைப்புகளை அடுத்து கப்பற் கம்பனிகளால் விதிக்கப்பட்ட அநேக மிகைக்கட்டணங்களால் ஏற்பட்ட உயர்ந்த கப்பற் கூலிச்செலவாலும், விலைகள் இதுவரை உயராதளவுக்கு கணிசமாக அதிகரித்தன.

இவ்வாண்டு காலப்பகுதியில் இறக்குமதி விலைக்குறிகாட்டி (1967=100) 158 ஆக இருந்து 209 வரை உயர்வடைந்தது. இதனுள்ளடங்கிய உணவிற்கான குறிகாட்டி 173 ஆக இருந்து 233 ஆக உயர்வுற்றது. இதன்விளைவாக, இறக்குமதிகளின் அளவு குறைவடைந்தது. இது, இறக்குமதி அளவுக்குறிகாட்டி (1967=100) 1972 ஆம் ஆண்டில் 88 ஆக இருந்து. 1973ஆம் ஆண்டில் 79 ஆகக் குறைவுற்றமையால் தெரியவருகின்றது. கிடைக்கத்தக்க மூலவளங்களில் ஏற்பட்ட முதல் தாக்கமாக ஆகக் குறைந்த மட்ட நுகர்வுப் பொருள் இறக்குமதிகள் விளங்கியதுடன் பெருந்தொகையான உணவுப் பொருட்களின் விலைகளும் மிக அதிகரித்துச் சென்றமையால் 1973இன் மொத்த இறக்குமதிகளில் உணவுப் பொருட்களின் பங்கு 44 சதவீதத்திலிருந்து 52 சதவீதமாக உயர்ந்தது. மேலும், இடைநிலைப்பொருட்கள், மூலதனப் பொருட்களின் இறக்குமதியிலான பங்கு குறைவடைந்தது. இது முறையே 26.9 சதவீதத்திலிருந்து 27.2 சதவீதமாகவும், 24.2சதவீதத்திலிருந்து 20.7 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது.

### (ஆ) பணிகளும் மாற்றல்களும்

இலங்கைச் சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கானது, வழமையாகக் குறைநிலையிலேயே இருந்தது. ஆனுல், 1965ஆம் ஆண்டில் இருந்து 1968 வரை இதற்கு விதிவிலக்காக அமைந்தது. இதற்கு இலாபங்களையும், பங்கிலாபங்களையும் காலந்தாழ்த்தி வழங்கலாமென்ற கடன்தவணை உரிமை மீது கட்டுப்பாடுகள் விதித்தமை காரணமாகும். 1969ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டெழுந்த குறையானது முன்னைய போக்குடன் இணைந்து காணப்பட்டதுடன், மேலும் முன்னைய சில ஆண்டுகளில் கொடுப்பனவுகளை வழங்காது வைத்திருந்தமையினுல் வலுப்படுத்தப்பட்டது. இச்சூழ்நிலையில் 1973ஆம் ஆண்டு பணிகள் கணக்கில் காணப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களில் ரூ. 570 இலட்சம் மிகை ஏற்பட்டுள்ளதால், கொடுப்பனவுகளில் மேலதிகக் கட்டுப்பாட்டு முறைகள்

கொண்டுவரத்தேவையற்றிருத்தல் வரவேற்கத்தக்க அறிகுறியாகும். புள்ளிகள் அடிப்படையில் நோக்குமிடத்து, வழமையான போக்குகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டதற்கமைய பணிகளுக்கான மொத்த வெளிக்கொடுப்பனவுகள் மாற்றமுறாதிருந்தன, ஆனால் கிடைப்பனவுகள் முன்னைய அளவுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இத்துறைதான் மிகைக்கு முதன்மை வளமாக விளங்கியது. துறைமுகப் பணிகள், குறிப்பாக கப்பல்கள், விமானக் கலம் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட எரிபொருள் தவிர சிறப்பாக போக்குவரத்துக் கணக்கிலும் பயணத்திலும் பெற்ற பெறுகைகள் ரூ. 540 இலட்சம் கொண்ட குறிப்பான அதிகரிப்பினை எடுத்துக்காட்டுகின்றன. மேலும், மற்றைய எல்லா வழிகளாலும் ஈட்டிய சிறு பெறுகைகள் மேலுமோர் ரூ. 510 இலட்ச அதிகரிப்புக்குக் காரணமாயிருந்தன.

1971ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய அமைதியின்மையால் தடைப்பட்ட சுற்றுலாப் பயணத்துறை வளர்ச்சி, 1973ஆம் ஆண்டில் பெருமளவாக அதிகரித்து மேல் நோக்கிச்செல்லும் போக்கினைத்தொடர்ந்து காட்டியது. இவ்வாண்டிற்கான வருவாய் 1972ஆம் ஆண்டில் கிடைத்ததிலும் 2 மடங்கிலும் மேலாக விளங்கியது. இவ்வதிகரிப்பானது, இந்நாட்டிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1972ஆம் ஆண்டில் 56,047 ஆக இருந்து 1973ஆம் ஆண்டில் 77,888 ஆக உயர்வுற்று, 39 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. இவ்வபிவிருத்தியானது, சுற்றுலாப் பயணிகளைக் கூடியளவு கவர்ந்திருக்கும் முறையில் உள்ளமைப்பு வசதிகளின் விரிவுடன் இணைந்து விளங்கியது. வதிவோரின் விகிதங்களைக் கணிப்பதிலிருந்தும், சுற்றுலா விடுதிகளின் செலவைத் தாங்கி தொழிற்படுத்தும் முயற்சியில் ஈட்டிய வெற்றியிலிருந்தும் அதிகரித்துச் செல்லும் தேவைக்கேற்ப சுற்றுலா விடுதிகளைப் பெருக்க வாய்ப்புண்டு என்று தெரியவருகிறது. எவ்வாறாயினும், விமான மார்க்கமான பிரயாணத்தில் சக்திப் பொருள் நெருக்கடியின் காரணமாக பன்னாட்டுச் சுற்றுலாத் தொழிலில் உறுதியற்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

துறைமுகச் செலவுகளால் ஈட்டிய கிடைப்பனவுகள் (கப்பலுக்கு சரக்கேற்றல், துறைமுகத் தீர்வைகள், பழுதுபார்க்கும் வசதிகள்) அண்மை ஆண்டுகளில் தொடர்ச்சியாக உயர்ந்து காணப்பட்டதுடன் 1973ஆம் ஆண்டில் மேலும் அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது 1972ஆம் ஆண்டில் ரூ. 1,000 இலட்சம் பதிவுசெய்யப்பட்ட தேறிய மிகையானது 1973ஆம் ஆண்டில் ரூ. 1140 இலட்சமாகக் காணப்பட்டது.

சென்மதி நிலுவையில் உள்ள மாற்றல்கொடுப்பனவுகள் கணக்கானது, இந்நாட்டிற்குள் உள்வருகின்ற வெளியேறு தனியார் குடியகல்வோரின் மாற்றல்களையும் உதவிப்பணக் கிடைப்பனவுகளையும் கொண்டுள்ளது. இக்கணக்கானது 1950 களின் இறுதியில் செலாவணிக் கட்டுப்பாடு, வெளிநாட்டிற்குத் தனியார் மாற்றல்கள் குறைத்ததையடுத்து சென்மதி நிலுவைக்கு சாதகமாக விளங்கி வந்துள்ளது. உதவிகளும், கொடைகளும் என்ற மிக முக்கிய பிரிவானது. தனியாரின் கணக்கில் எழுகின்ற வெளியேகும் பணத்திற்கு எதிரீடு செய்கின்றது. இப்பிரிவின் போக்கானது, உதவிபுரிகின்ற நாடுகளின் உதவிக் கொள்கைகளாலும் அவற்றின் சென்மதி நிலுவை நிலைமையினாலும் தாக்கத்திற்குட்படாமல், பெருமளவுக்கு இந்நாட்டின் சென்மதி நிலுவைக் கொடுப்பனவுகளின் தேவையை நிறைவுசெய்யும் முறையிலேயே அமைந்துள்ளது.

## அட்டவணை II (ஏ) 4

### 1972-இலும், 1973-இலும் பணிகள் கணக்கின் முக்கியமானதுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 (அ) | மாற்றம் | 1972 | 1973 (அ) | மாற்றம் | 1972 | 1973 (அ) |
| துறைமுகப் பணிகள், ஏற்றியிறக்கல், காப்புறுதி ... | 154 | 177 | + 23 | 61 | 62 | + 1 | + 93 | + 115 |
| வெளிநாட்டுப் பயணம் ... | 28 | 59 | + 31 | 12 | 10 | — 2 | + 16 | + 49 |
| முதலீட்டு வருமானம் ... | 10 | 17 | + 7 | 125 | 127 | + 2 | — 115 | — 110 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 1 | 1 | — | 23 | 19 | — 4 | — 22 | — 18 |
| (ii) வட்டி ... | 9 | 16 | + 7 | 102 | 108 | + 6 | — 93 | — 92 |
| அரசாங்கச் செலவினம் ... | 33 | 33 | — | 20 | 20 | — | + 13 | + 13 |
| பல்வகைப் பணிகள் ... | 83 | 103 | + 20 | 105 | 115 | + 10 | — 22 | — 12 |
| தனியார் மாற்றல்கள் ... | 24 | 48 | + 24 | 50 | 46 | — 4 | — 26 | — 2 |
| மொத்தம் ... | 332 | 437 | + 105 | 373 | 380 | + 7 | — 41 | + 57 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1973ஆம் ஆண்டில் உதவிகளும் கொடைகளும் ரூ. 830 இலட்சமாகவும் அதற்கு முந்திய 2 ஆண்டுகளிலும் ரூ 1,000 இலட்சமாகவும், ரூ. 1,050 இலட்ச மாகவும் விளங்கின. இதற்கு மாருகத் தனியார் மாற்றல்கள் குறிப்பாக உள்வருந் தொகைகள் அதிகரிப்பினைக்காட்டின. இதற்கு வெ. செ. உ. சா. உடன் மற்றைய தூண்டுதல்கள், குறிப்பாக விசேட கணக்குகள் திட்டத் தினூடாக வெளிநாட்டில் தொழில் புரிகின்ற இலங்கையர்கள் அரசாங்கத் துறையினூடாக பணவனுப்பலைக் கூட்டவும், ஒழுங்குபடுத்தவும் வழிவகுத்த அரசின் கொள்கையே காரணமாகும். வெளிநாட்டில் உள்ள இலங்கை யர்கள் தாமாக அனுப்புகின்ற பணங்களுக்குச் சலுகை வழங்குவதன் மூலம், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையரின் சிறிய சேமிப்புகளைத் திரட்டுவதற்காக, நிதி அமைச்சரினுல் வரவு செலவுத்திட்டத்தில் கூறப்பட்டதற் கிணங்க 1971ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. கடவுச்சீட்டுப் (ஒழுங்கு விதி) படியும், வெளிச்செல்லும் அனுமதிச் சட்டத்தின்படியும் வெளிநாட்டில் தொழில் பெறுகின்ற இலங்கையர்கள் அவர் களுடைய வருவாயில் 10 சதவீதம் வரை நாட்டிற்கு அனுப்பல்வேண்டும். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையரல்லாதோர் வெளியேறுகின்ற வீதம் அதிகரித்தமையால், உயர்ந்தமட்டத்தில் காணப்பட்ட உள்வருகின்ற தனியாருக்கான வருவாயானது, உயர்ந்த மட்டத்திலான வெளிச்செல்கின்ற வருவாயுடன் இணைந்தேகாணப்பட்டது.

மாற்றல்களுக்கான கொடுப்பனவுகள் கணக்கானது பணிகள் கணக்கு களுடன் சென்மதி நிலுவையின் கட்புலனுகா உறுப்பையும் உள்ளடக்கியுள்ளது. கட்புலனுகாக் கணக்கிலிருந்து எழுகின்ற நிலுவையானது, வணிகப் பொருட் களுக்கான கொடுக்கல்வாங்கல்களில் ஏற்படுகின்ற சாதகமற்ற நிலுவைகளை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம். இது கட்புலனுகாகக் கணக்கு குறையிலா அல்லது மிகையிலா இருக்கின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. 1964-1968ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்புலனுகாக் கணக்கானது, பாதகமான வர்த்தக நிலுவையில் ஓரளவு செல்வாக்கினைச் செலுத்திவந்ததன் மூலம் நடைமுறைக் கணக்கில் நிலவிய மொத்தக் குறையை ஓரளவு குறைக்கத் துணைநின்றது. இதன் பங்கு 1969ஆம் ஆண்டிலும் 1970ஆம் ஆண்டிலும் மாறுபட்டதனுல் வணிகப்பொருட் கொடுக்கல்வாங்கல்களில் காட்டப்பட்ட பணக்குறை அதி கரித்து விளங்கியது. இதற்குக் கடன்தவணைப்பணம் வழங்கல் உரிமையைத் தளர்த்தியமையாலும் உயர்ந்துசெல்லும் வெளிநாட்டுக் கடனினுல் ஏற்பட்ட அதிகரித்த கடன்தீர்ப்புக்கொடுப்பனவுகளாலும் முதலீட்டு வருமானத்திற் கான வெளிச்செல்லும் பணங்கள் அதிகரித்தமையே காரணமாகும். எனினும், 1971ஆம்ஆண்டுதொடக்கம் கட்புலனுகாக் கணக்கானது, வர்த்தக நிலுவையில் ஏற்படுகின்ற பாதகமான நிலைமையைச் சீர்செய்கின்ற பழைய பங்கினை ஏற்றது 1973ஆம் ஆண்டு மிகையில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு இச்சார்பான போக்கின் திருந்திய நிலையைக் காட்டுகின்றது. இம் மிகையானது 1973ஆம் ஆண்டில் ரூ. 1,380 இலட்சமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில் 1971ஆம் ஆண்டிலும் 1972 ஆம் ஆண்டிலும் முறையே ரூ. 710 இலட்சமாகவும், ரூ.

590 இலட்சமாகவும் விளங்கியது. கட்டுலஞகாக் கணக்கில் ஏற்பட்ட அதிகரித்த சாதனைகளின் நிமித்தம் வணிகக்குறையில் ஏற்பட்ட அதிகரித்த பாதக விளைவுகள் குறைக்கப்பட்டு நடைமுறைக் கணக்கின் குறை ரூ. 1.610 இலட்சமாக விளங்கியது.

**(இ) மூலதனக் கணக்கு**

1973ஆம் ஆண்டில் இலங்கை தனது மூலவள இடைவெளியாகிய ரூ. 15,180 இலட்சத்திற்கு நிதியுதவிசெய்யவேண்டியிருந்தது. 1969ஆம் ஆண்டு தொட்டு அவதானிக்கப்பட்டுவந்த இவ்விடைவெளி இவ்வாண்டில் மூலவளக் குறை ரூ. 10,000 இலட்சத்திற்கு மேலாக இருந்ததுடன் இதுவரை பதியப்பட்ட மிகஉயர் எண்தொகையாக 1973இல் விளங்கியது. இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த செலவீடுகளும், உயர்ந்த கடன் தீர்பனவுகளுமே இதற்கான முக்கிய காரணங்களாகும். குறிப்பாகக் குறுகிய நடுத்தரத்தவணைக்காலக் கடன்களும், சிறியளவிற்கு வங்கிக் கடன்பாடுகளுக்கான திருப்பிக்கொடுப்பனவுகளும், வெளிநாட்டுச் சொத்துக்களை ஏற்படுத்த முயன்றமையும் காரணமாகலாம்.

**அட்டவணை II (ஏ) 5**

**வெளிநாட்டு நிதிவள இடைவெளியை நிதியீட்டும் வழிமுறைகள் 1972 1973**

| வழிமுறைகள் | 1972 | | 1973 (அ) | |
|---|---|---|---|---|
| | ப. இ. ரூ. | சதவீதப் பங்கு | ப. இ. ரூ. | சதவீதப் பங்கு |
| நிதிவள இடைவெளி .. | −1,291 | | −1,518 | |
| நிதியீட்டல் ... | +1,291 | 100.0 | +1,518 | 100.0 |
| 1. வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | — 229 | — 17.7 | — 125 | — 8.2 |
| 2. வெளிநாட்டு வங்கிக் கடன்பாடுகள் ... | 12 | 1.0 | — | — |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 163 | 12.6 | 137 | 9.0 |
| 4. இருபுடை வணிக நிலுவைகள் ... | — 11 | — 0.9 | 1 | 0.1 |
| 5. குறுகியகால வணிகக் கொடுகடன்கள் ... | 593 | 45.9 | 781 | 51.4 |
| 6. நிரம்பல் செய்வோர் கொடுகடன் ... | 52 | 4.0 | 240 | 15.8 |
| 7. பண்ட உதவி ... | 304 | 23.6 | 210 | 13.8 |
| 8. செயற்றிட்ட உதவி ... | 98 | 7.6 | 125 | 8.2 |
| 9. ஏனைய கடன்களும், கொடுகடன் வழிகளும் ... | 13 | 1.0 | — | — |
| 10. கொடைகள் ... | 100 | 7.7 | 83 | 5.5 |
| 11. தனியார் மூலதனம் ... | 10 | 0.8 | 6 | 0.4 |
| 12. ஏனைய ... | 107 | 8.3 | 48 | 3.2 |
| 13. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 62 | 4.8 | — | — |
| 14. பிழைகளும், தவறுகளும் ... | 17 | 1.3 | 12 | 0.8 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலங்கையை இன்று எதிர்நோக்கியுள்ள வெளிநாட்டுக் கணக்குகளின் நிலைமையைப் பொறுத்தவரை நீண்ட கால முதலே பொருள்வள இடைவெளியை நிரப்புவதற்கு ஏற்ற நிதியாக விளங்குகின்றது. அண்மைக் காலங்களில் தனியாருடைய நீண்டகால முதல் நிதியுதவிசெய்கின்ற முக்கிய மூலமாக விளங்கவில்லை. நாட்டிற்குள் வருகின்ற நீண்டகால அரசாங்க முதலான (பண்ட, செயல்திட்ட உதவி) 1971ஆம் ஆண்டு உச்சத்தொகையான ரூ. 4,940 இலட்சத்திலிருந்து 1972ஆம் ஆண்டில் ரூ. 4,150 இலட்சமாகக் குறைவுற்று, 1973இல் மேலும் குறைவுக்குள்ளாகி, ரூ. 3,350 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இத்தொகையிலிருந்து பழைய கடன்பாடுகளின் மீளக் கொடுப்பனவுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,410 இலட்சமெனக் கணக்கிடின் தேறிய உள்வரவு ரூ. 1,940 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பண்ட உதவிக்கடனில்தான் முழு வீழ்ச்சியும் காணப்பட்டது. இது 1972ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற தொகையிலும் பார்க்க, ரூ. 940 இலட்சத்தால் குறைந்திருந்தது. மேலும், 1973ஆம் ஆண்டில் உதவிக்கடன் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதில் ஏற்பட்ட சில தாமதங்களும் இவ்வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணங்களில் ஒன்ருகும். 1973ஆம் ஆண்டு மாச்சு மாதம் உதவிக்கடன் குழுக்கூட்டம் நடைபெற்றதென்னும், ஒப்பந்தங்களில் பெரும்பகுதி இவ்வாண்டின் இறுதிக் காலப்பகுதியில் தான் கைச்சாத்திடப்பட்டது. இதனுல் கணிசமான தொகை 1974ஆம் ஆண்டிற்கே உரியதான நிலையை ஏற்படுத்தியது. 1972ஆம்* ஆண்டில் உதவிக்கான முயற்சிகள் குறைக்கப்பட்டமையும், அதனைத் தொடர்ந்து 1973ஆம் ஆண்டில் உதவிகள் குறையக் காரணமாகியது.

நீண்ட தவணைக்கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மூலவள இடைவெளியை நிரப்பும் பெரும் பங்கு கடந்த ஆண்டுகளைப்போல மிகக்கூடிய அளவிற்கு குறுகிய கால நடுத்தர காலக் கடன்களிற்தான் தங்கியிருத்தலைக் காட்டுகின்றது. ஆனுல் இவை பெருமளவில் அமைந்திருந்தன. குறுகியகால மூலங்களிலிருந்துதான் ரூ 10,210 இலட்சம் கொண்ட (குறுகிய காலக் கொடுகடன்களும், வழங்குநர் கொடுகடன்களும்) மூலவளங்கள் பெறப்பட்டன. அதே நேரத்தில் ரூ. 1,370 இலட்சம்கொண்ட தொகை பன்னுட்டு நாணய நிதியிலிருந்து கிடைக்கப்பெற்றது: இவ்வாண்டு காலப்பகுதியில், குறுகிய தவணைக் கடன்களுக்கான (குறுகிய - காலக் கொடுகடன்களும், வழங்குநர் கடன்களும்) திருப்பிக்கொடுப்பனவுகள் ரூ 7,395 இலட்சமாக விளங்கின. இதன்படி பார்க்குமிடத்து தேறிய அடிப்படையில் குறுகிய காலக்கொடுகடன் 1973ஆம் ஆண்டில் ரூ. 2,820 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது, 1971ஆம் ஆண்டிலும், 1972ஆம் ஆண்டிலும் முறையே ரூ. 870 இலட்சமாகவும், ரூ. 450 இலட்சமாகவும் விளங்கியது. இந்நிலைமை சீரற்ற தன்மையைக் காட்டினுலும்கூட வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ 1,250 இலட்சத்தால் உயர்ந்தும், வெளிநாட்டு வங்கித்தொழிற்பாட்டுக் கடன்கள் ரூ.1,420 இலட்சத்தால் குறைவடைந்தும் இருப்பதனை எடுத்துநோக்கி இதனை ஆராய்தல் வேண்டும்.

1972ஆம் ஆண்டில் ஏற்றுமதித் தளம்பல்களுக்கு நட்ட நிதியுதவி என்ற பன்னுட்டு நாணய நிதியின் திட்டப்படி ரூ. 1,370 இலட்சம் எடுப்பனவுகள் பெறப்பட்டன. முன்னைய வருடத்தைப்போன்று, துணை ஒப்பந்தங்கள், விசேட

---

* 1972ஆம் ஆண்டில் உதவி அளிக்கும் நாடுகள் ரூ. 1480 இலட்சத்தால் குறைத்து ரூ. 2960 இலட்சமாக்கியது.

எடுப்பனவு உரிமைகளுக்கான ஒதுக்குகள் போன்ற கடன்கள் கிடைக்கவில்லை. மேலும் ரூ. 120 இலட்சம்கொண்ட தொகையானது ரூபாய்களில் செலுத்த வேண்டிய கட்டணமாக, ப. நா. நிதியில் வரவுவைக்கப்பட்டது. மறுபுறம், கடந்த எடுப்பனவுகளுக்கான மீளக்கொள்வனவுகள் ரூ. 1,690 இலட்சமாக விளங்கின. இதன்விளைவாக ப. நா. நிதியிடம் இலங்கையின் தேறிய கடன்நிலை ரூ. 200 இலட்சத்தால் குறைக்கப்பட்டது. ஒப்புநோக்குகையில் 1972ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 120 இலட்சத்தால் அதிகரித்திருந்தது.

1968 ஆண்டு தொட்டு, வெளிநாட்டு மூலவளக் குறையின் பெரும்பங்கு, குறுகிய கால, நடுத்தரக்கால மூலங்களால் நிதியுதவிசெய்யப்பட்டு வந்தமையினல் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கணக்குகளில் உருவான அடிப்படைக்குறைபாட்டை மேற்கூறப்பட்ட 1973ஆம் ஆண்டிற்கான மூலதனக் கணக்கின் கொடுக்கல்வாங்கல்கள் எடுத்துக்காட்டுகின்றன. தற்கால வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் முதலில் கடந்தகாலக் கடன்பாடுகளுக்கான தீர்ப்புக்கொடுப்பனவுகளின் தொகையே கழிக்கப்படுவதால் ஆகக் குறைந்தளவு மட்ட இறக்குமதிகள் என்பது புதிய பின்போடப்பட்ட கொடுப்பனவுகளுக்கான சலுகைகளைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளில்தான் தங்கியுள்ளது.

1974ஆம் ஆண்டிற்கான வாய்ப்புக்களை மதிப்பிடுமிடத்து, வழங்குநருடைய பொருளாதாரத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளாலும், வழக்கமான செயல் முறைகள் தாமதத்தாலும் இலங்கைக்குத் தேவையான நீண்ட தவணைக்கடன் அளவு கிடைப்பதும், உரிய காலத்தில் பெறக்கூடிய நிலைமையும் தென்படவில்லை. எனவே, குறுகிய காலக் கடன்களை நாடல் தவிர்க்க முடியாத தொன்றும். கடந்தகால அறிக்கைகள் கூடியளவுக்கு குறுந் தவணைக் கடன்களை நாடல் விரும்பத்தகுந்ததல்ல என்பதனை எடுத்துக்காட்டுகின்ற அதே நேரத்தில் தற்போதைய அறிக்கையின் பாகம் 1 இத்தகைய சூழ்நிலைகளில் இக்கொடுகடன்களில் தங்கியிருப்பதிலுள்ள பாதக விளைவுகளையும், ஆபத்துகளையும் சுட்டிக்காட்டுகின்றது.

## 2. வெளிநாட்டு இருப்புச்சொத்துக்கள்

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, இலங்கையின் மொத்த வெளிநாட்டு இருப்புச்சொத்துக்கள் 1973ஆம் ஆண்டில் ரூ. 1,245 இலட்சத்தால் அதிகரித்தன. இது, 1972ஆம் ஆண்டில் ரூ. 2,286 இலட்சம்கொண்ட அளவிற்குச் சொத்துக்கள் அதிகரித்துக் காணப்பட்ட போக்கின் தொடர்ச்சியாகும். 1973ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 8,513 இலட்சமாக விளங்கியதுடன், 1969ஆம் ஆண்டு தொடக்கம் செய்யப்பட்ட பதிவில் இதுவே மிக உயர்ந்ததாகும். இதற்கு மத்திய வங்கியின் இருப்புச்சொத்துக்கள் ரூ. 1,950 இலட்சத்தால் அதிகரித்தமை பெருமளவு காரணமாகும். ஆனல், அரசாங்கத்தினதும், வர்த்தக வங்கிகளினதும் சொத்துக்கள் முறையே ரூ. 504 இலட்சத்தாலும் ரூ. 236 இலட்சத்தாலும் வீழ்ச்சியடைந்தன. மக்கள் குடியரசுச் சீனவுடன் செய்த கொடுப்பனவுகள் ஒப்பந்தக் கணக்கின்கீழ் காணப்பட்ட இலங்கைக்கான நிலுவை குறைந்தமையினலேயே அரசாங்கத்தின் வெளிநாட்டுச்சொத்துக்கள் குறைவடைந்தன.

அட்டவணை II (ஏ) 6

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்*

ப. இ. ரூபாய்கள்

| | திசெம்பர் 1971 | திசெம்பர் 1972 | திசெம்பர் 1973 | மாற்றம் 1971/72 | மாற்றம் 72/73 |
|---|---|---|---|---|---|
| அரசாங்கம் ... ... ... | 12.4 | 53.7 | 3.3 | + 41.3 | — 50.4 |
| அரசாங்க முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ... ... | 62.3 | 67.3 | 70.7 | + 5.0 | + 3.4 |
| மத்திய வங்கி ... ... | 238.2 | 285.4 | 480.5 | + 47.2 | + 195.1 |
| வர்த்தக வங்கிகள் ... .. | 185.2 | 320.3 | 296.7 | + 135.1 | — 23.6 |
| மொத்தம் ... ... ... | 498.1 | 726.7 | 851.2 | + 228.6 | + 124.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சீனுவுக்குச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது, சிறியளவிற்கே சென்மதி நிலுவையில் ஏற்பட்ட அதிகரிப்பிஞல் உயர்ந்துள்ளது. வர்த்தக நிலுவை கீழடைந்துசெல்லும் போக்கினைக் காட்டுகின்றவேளையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பானது ஒருபுறத்தில் இறக்குமதி அளவைக் குறைத்ததன்மூலமும் மறுபுறம் குறுந்தவணையில் செலுத்தவேண்டிய கடன்களைச் செலுத்தாது சேர்ப்பதன்மூலமும்தான் ஏற்பட்டது. 1973ஆம் ஆண்டில் அரசாங்கத்தின்* குறுகிய தவணைப் பொறுப்புக்கள் ரூ. 2,530 இலட்சம் அதிகரிப்பினைப் பதிவுசெய்திருக்க, இலங்கை மத்திய வங்கியினதும், வர்த்தக வங்கிகளினதும் பொறுப்புக்கள் முறையே ரூ. 720 இலட்சத்தாலும் ரூ. 700 இலட்சத்தாலும் வீழ்ச்சியடைந்தன. எனவே 1973ஆம் ஆண்டில், தேறிய அடிப்படையில் நோக்குமிடத்து, இலங்கையின் குறுந்தவணையில் செலுத்தவேண்டிய கடன்கள் ரூ. 1,110 இலட்சத்தால் அதிகரித்தன.

### மாற்றலுக்குரிய ரூபாக்கணக்குத் திட்டம்

''வழமையாக ஏற்றுமதி செய்யப்படாத பொருட்களின்'' ஏற்றுமதியினைக் கூட்டுவதற்கு, குறிப்பாக இரத்தினக்கற்கள் ஏற்றுமதி போன்றவற்றை, மேலதிக தூண்டுதலாக மாற்றலுக்குரிய ரூபாக்கணக்குத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. மேலும் அவற்றிலான வருவாய்களை அரசாங்க வழிமுறைகள் ஊடாகப் பெறுதலைத் தூண்டுவதற்கும் இத்துறை உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, வழமையாக ஏற்றுமதிசெய்யப்படாத பொருட்களை ஏற்றுமதிசெய்யும் அல்லது சிறிய ஏற்றுமதிப் பொருட்களையும் மற்றும் சில பணிகளை ஆற்றும் ஏற்றுமதியாளர்கள், வருவாயில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை மாற்றலுக்குரிய ரூபாக் கணக்கில்** வரவாகப்பதிய அனுமதிக்கப்படுவர். இத்தொகையை

* குறுகியகாலத் தவணைக் கடன்கள், வழங்குநரின்கடன்கள், முடிக்குரிய முகவர்களின் பற்றுநிலுவைகள்

** வெ. சா. உ. சா. மூலம் பெற்ற வருவாய்களும் வரவில் இடம்பெற்றுள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரின் அனுமதிப்பத்திரத்தின்மூலம் செய்யப்படுகின்ற இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்கும், வேறுசில கட்புலனாகாத கொடுப்பவுகளுக்கும், உதாரணமாக, வெளிநாட்டுப் பிரயாணம் போன்றவற்றிற்கு, செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியுடன் இப்பணத்தைப் பயன்படுத்தலாம். 1972ஆம் ஆண்டு யூலை மாதம் 11ஆந் திகதி தொட்டு இரத்தினக்கற்கள் ஏற்றுமதிக்கான வருவாயில் 35 சதவீதம் மாற்றக்கூடிய ரூபாக்கணக்கில் வரவாகப் பதிவுசெய்வதற்குத் தகுதிபெற்றது. 1973ஆம் ஆண்டு ஆரம்பந்தொட்டு தனிப்பட்டவர் ஆக்கிய சித்திரம், சிற்பம் போன்ற ஏற்றுமதிகளுக்கும் மற்றைய தனிப்பட்டோரின் கலைப்படைப்புகள், இலக்கிய, அறிவியற் கட்டுரைகள், வெளிநாட்டில் வெளியிடுவதற்கான கட்டுரைகள், தொழில்சார்ந்த அறிவுரைகள் வழங்கல்மூலம் பெறுகின்ற வருவாய்களுக்கும் இச்சலுகை வழங்கப்பட்டது. இவ்வாண்டு ஆரம்பந்தொட்டு, நவெம்பர் 2ஆந் திகதிவரை மாற்றக்கூடிய கணக்கிற்கான சலுகை ஏனைய சிறிய ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில், மொத்த வருவாயில் 2 சதவீதமாகவும் அதன்பின் 3 சதவீதமாகவும் உள்ளது.

1973ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடம் மாற்றக்கூடிய திறந்த ரூபாக்கணக்குகளின் எண்ணிக்கை 709 ஆகும். இதில் மொத்த வரவுகள் ரூ. 542 இலட்சமாகவும், பற்றுக்கள் ரூ. 226 இலட்சமாகவும் இருக்கின்றன. பல்வேறு பாகுபாடுகொண்ட இம் மாற்றக்கூடிய ரூபாக்கணக்கின் வரவுகளில் ரூ. 465 இலட்சம் அல்லது 85.8 சதவீதமான வரவை இரத்தினக்கல் ஏற்றுமதிகளே கொண்டுள்ளது. ஏனைய மரபுரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதிகள், சுற்றுலாத்தொழில் முறையே ரூ. 68 இலட்சத்தினையும் ரூ. 9 இலட்சத்தினையும் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டுத்தொகைகளுடன் ஒப்பிடுமிடத்து, 1973ஆம் ஆண்டில் (ரூ. 1,300 இலட்சம்) இரத்தினக்கற்கள் ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மாற்றக்கூடிய ரூபாக்கணக்கானது, ஏற்றுமதி அளவு சடுதியாக வளர்ச்சி அடைவதற்கு மாத்திரமல்ல, அரசாங்கத்தின் ஊடாக அத்தகைய ஏற்றுமதிகள் நடாத்தப்படுவதற்கும் வழியாக அமைந்ததனை எடுத்துக்காட்டுகின்றது.

மாற்றக்கூடிய ரூபாக்கணக்கிலான மிகப்பெரிய பங்காக இருந்த பற்றுகள், இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளையே கொண்டுள்ளது. மொத்தப்பற்றுக்களின் ரூ. 226 இலட்சத்தில் ரூ. 191 இலட்சம் இறக்குமதிகளுக்காக இருக்கும் அதேநேரத்தில், வெளிநாட்டுப்பிரயாணம், உள்நாட்டுச் செலவுகள் முறையே ரூ. 30 இலட்சத்தினையும், ரூ. 5 இலட்சத்தினையும் கொண்டிருந்தது. மேலும் 1-3-73 தொட்டு 31.12.73 வரையான காலப்பகுதியில் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து, இறக்குமதிக்கான கொடுப்பனவுகளில் பெரியளவு கைத்தொழில் மூலப்பொருட்களுக்கும், வர்த்தக அனுமதிப் பங்கு விடயங்களுக்குமே செலவிடப்பட்டது, முன்னையவற்றிற்காக ரூ. 57 இலட்சமும் பின்னையவற்றிற்கு ரூ. 87 இலட்சமும் கொடுப்பனவுகளாக விளங்கின. வழங்கப்பட்ட இறக்குமதிப்பத்திரங்களில் 17 சதவீதம் அல்லது ரூ. 35

இலட்சங்கொண்ட மாற்றக்கூடிய ரூபாய்கள் மோட்டார் வாகன இறக்குமதிக்குப் பயன்படுத்தப்பட்டது. எனவே இத்திட்டத்தில் இருந்து வருகின்ற மாற்றக்கூடிய ரூபாய்களில் பெருமளவு நுகர்விலும் பார்க்க அபிவிருத்தி தொடர்பான காரணங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டது.

**வெளிநாட்டுக் கடன்***

இலங்கையில் வெளிநாட்டுக்கடனில், கடன் தீர்ப்பனவுகளுக்கான கொடுப்பனவுகள், 1973ஆம் ஆண்டில் ரூ. 5,126 இலட்சமாகவும், முன்னைய ஆண்டில் ரூ. 4,802 இலட்சமாகவும் விளங்கின [அட்டவணை 11 (ஏ) 17ஐப் பார்க்கவும்]. 1973ஆம் ஆண்டில் இக்கடன் தீர்ப்பனவுகளில் ரூ. 4,042 இலட்சத் தொகை கடன் தீர்ப்பனவுத் தொகையாகவும் ரூ. 1.084 இலட்சம் வட்டி அனுப்பல்களாகவும் காணப்பட்டன. 1972ஆம் ஆண்டிற்கான ரூ. 3,783 இலட்சமும், ரூ. 1,919 இலட்சமும் இவற்றுடன் ஒப்பிடற்பாலவையாகும்.

**அட்டவணை II (ஏ) 7**

**வெளிநாட்டுக் கடன்பாட்டின் பணிக் கொடுப்பனவுகள், 1969—1973**

ப. இ. ரூபாய்கள்

| | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 |
|---|---|---|---|---|---|
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 282.3 | 453.4 | 410.6 | 480.6 | 215.6 |
| (அ) கடனழிப்பு ... | 213.9 | 353.7 | 306.1 | 378.3 | 404.2 |
| (ஆ) வட்டி ... ... | 68.4 | 99.7 | 104.5 | 101.9 | 108.4 |
| 2. பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி வருவாய்கள்... . | 2,162.8 | 2,253.3 | 2,244.2 | 2,205.9 | 2,733.3 |
| 3. படுகடன் பணி விகிதம் (2இன் சதவீதமாக 1) ... .. ... | 13.1 | 20.1 | 18.3 | 21.8 | 18.8 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

பொருட்களினதும், பணிகளினதும் ஏற்றுமதி வருவாய்களின் சதவீதமாக காட்டப்பட்ட கடன்தீர்ப்பு வட்டிக்கொடுப்பனவுகள் கொண்ட மொத்தக்கடன் தீர்ப்புக்கொடுப்பனவுகளின் விகிதம் 1973ஆம் ஆண்டில் 18.8சத வீதமாகவும், 1972ஆம் ஆண்டில் 21.8 சதவீதமாகவும் காணப்பட்டது. ஆய்விற்கெடுக்கப்பட்ட ஆண்டிற்கான இவ்விகிதம் வீழ்ச்சியடைந்தமைக்கு, நாட்டின் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

* அரசாங்கச் சார்பற்ற நிதிநிறுவனங்கள். அதாவது இப்பகுதியில் மத்திய வங்கியென்பனவற்றில் வெளிநாட்டுக் கடன்நிலை உள்ளடக்கப்பட்டிருப்பதால் இப்பகுதியில் உள்ள தரவுகள். அரசாங்க நிதி என்ற பகுதியில் கொடுக்கப்பட்ட தரவுகளில் இருந்து மாறுபட்டுக்காணக்கூடும்.